Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20160202T

## இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக பேச்சுவார்த்தைகளுக்கு முன்பதாக இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் பிரதான வர்த்தக பிரதிநிதி மைக்கல் டெலானி

**பெப்ரவரி 2, 2016:** பெப்ரவரி முதலாம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்த தெற்காசியாவுக்கான அமெரிக்காவின் உதவி வர்த்தக பிரதிநிதி மைக்கல் ஜெ. டெலானி, அரசாங்க, வர்த்தக மற்றும் வணிகம் சார் அதிகாரிகளை சந்தித்தார். விரைவில் வாஷிங்டனில் நடைபெறவுள்ள வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு உடன்படிக்கை (TIFA) பேச்சுக்களுக்கு முன்பதாக இந்த சந்திப்புக்கள் இடம்பெற்றன. அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரமவையும், வெளிவிவகார அமைச்சு, பொது தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சு, முதலீட்டுச் சபை, வர்த்தக திணைக்களம் மற்றும் பிரதமர் அலுவலகத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்த டெலானி வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அதிரிப்பதற்கான வழிகள் குறித்து கலந்துரையாடினார்.

*"ஏனைய நாடுகளை விட அமெரிக்காவுக்கே இலங்கை அதிகளவில் ஏற்றுமதிகளை மேற்கொள்கின்றது"* என அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப் தெரிவித்தார். *"இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டுச் சந்தர்ப்பங்களை அதிகரித்தலானது அனைவரது வளவிருத்திக்கும் உதவும்"* என அவர் மேலும் குறிப்பிட்டார்.

தொழிற்சங்கங்கள் மற்றும் வர்த்தக தொழில் உறவுகள் அமைச்சின் பிரதிநிதிகளை சந்தித்து தொழிலாளர் சார் விடயங்கள் குறித்து கலந்துரையாடிய டெலானி, அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் உறுப்பினர்களிடமிருந்து தனியார் துறை சார்ந்த கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டார். இந்த சந்திப்புக்களின் போது புலமைச்சொத்து உரிமைகள் சார்ந்தும் டெலானி கலந்துரையாடினார்.

*"மிக முக்கியமான பொருளாதார திருத்தங்களை முன்னெடுப்பதற்கு பொருத்தமான நிலையில் தற்போது இலங்கை உள்ளது"* என டெலானி கூறினார். *"நடைமுறைப்படுத்த இயலுமாயின் இலங்கையானது தமது ஆற்றலை உறுதியான வர்த்தக மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டுச் செயற்பாடுகளுடன் அதிகரிக்க முடியும்"* என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்காவுக்கும், பங்காளர் நாடுகளுக்கும் இடையில் வர்த்தக மற்றும் முதலீட்டு விடயங்கள் சார்ந்த உரையாடலுக்கான உபாயம்சார் கட்டமைப்புக்களையும், கோட்பாடுகளையும் வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு உடன்படிக்கைகள் (TIFA) வழங்குகின்றன. ஒத்துழைப்பை மேம்படுத்தல் மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டு சந்தர்ப்பங்களை பரவாக்கல் ஆகிய குறிக்கோள்களுடன் பரஸ்பர விருப்பினை எட்டுவதற்கும், கலந்துரையாடுவதற்கும் அமெரிக்காவுக்கும், ஏனைய அரசாங்கங்களுக்கும் இடையிலான வசதியை இந்த உடன்படிக்கைகள் வழங்குகின்றன.

# # #

Photo Caption:

1. அமெரிக்காவின் உதவி வர்த்தகப் பிரதிநிதி மைக்கல் டெலானி இலங்கை அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகளை சந்தித்தார்.

2. அமெரிக்காவின் உதவி வர்த்தகப் பிரதிநிதி மைக்கல் டெலானி அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரமவை சந்தித்து வர்த்தக விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.